<u>**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**</u>

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 393/2021 |
| நாள் | 24.10.2025 |
| வா.சா.1 | பழனிச்சாமி |
| வயது | 70 |
| ஊர் | கரூர் |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

<u>**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

பிரதிவாதிகள் எங்கு வசித்து வருகிறார்கள் என்று தெரியுமா என்றால் பாறைக்கு வடபுறமாக வசித்து வருகிறார்கள். அதன் சர்வே எண் நியாபகமில்லை. பிரதிவாதியின் வீட்டிற்கு தென்புறம் சர்வே எண். 239, 240–ல் அரசாங்க நிலம் உள்ளதா என்றால் சர்வே எண்.240 பாறையாக உள்ளது. சர்வே எண்.239 ஊரில் இருந்து வரும் பாதையாக உள்ளது. பாதை சர்வே எண். 238/1–ல் தென்கிழக்கு மூலையில் சென்று முடிவடைகிறது. அந்த பாதைக்கு கீழ்புறமாக கிருஷ்ணமூர்த்தி நிலம் அமைந்துள்ளது. சர்வே எண். 238/1 உள்ள நிலத்தை நான்கெல்லை குறிப்பிட்டு பாகப்பிரிவினை ஏதேனும் செய்துள்ளேனா என்றால் இல்லை. சர்வே எண். 238/1 உள்ள நிலத்திற்கு தென்புறத்தில் சர்வே எண். 238/4, 238/5, பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலங்கள் உள்ளது. சர்வே எண். 238/3 ஒரு சண்முகம் என்பவருக்கு பாத்தியப்பட்டதாகும். சர்வே எண். 238/3, 238/4 மற்றும் 238/5 ஆகிய நிலங்களுக்கு கீழ்புறமாக பாதை அமைந்துள்ளது என்றால் அரசாங்க நிலத்தை தான் பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள். சர்வே எண். 238/2 –ல் உள்ள நிலம் எனக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட நிலமாகும். சர்வே எண்.248 பிரதிவாதிகளுக்கு நிலம் உள்ளதா என்றால் இருக்கலாம். நான் கம்பிவேலி போட்டுள்ள பாதை வழக்கு

தாக்கல் செய்வதற்கு முன்பாக கிளுவமுள் பாதையாக பயன்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் குறிப்பிடும் பாதை சுமார் 15 அடி அகலம் கொண்ட பாதை என்றும், அவை சர்வே எண் 237/1–ல் உள்ள கிணற்றுக்கு செல்லுகிறது என்றால் அந்த பாதை நாங்கள் தனிப்பட்ட முறையில் எங்கள் சொந்த உபயோகத்திற்காக போடப்பட்டதாகும். அதில் வெளி நபர்களுக்கு உரிமை கிடையாது. சர்வே எண். 237 என்பது சர்வே எண். 238/1ற்கு வடபுறமாக அமைந்துள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் சர்வே எண். 239 பாதையில் இருந்து சர்வே எண். 238/4, 248 ஆகிய சர்வே எண்களுக்கு செல்கிறார்களா என்றால் சரியல்ல. சர்வே எண். 248–ல் உள்ள பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலத்திற்கு தென்புறமும், வடபுறமும் யாருக்கு பாத்தியப்பட்ட நிலங்கள் அமைந்துள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் நியாபகமில்லை. பிரதிவாதிகளின் வீட்டில் இருந்து சர்வே எண்.248–ல் உள்ள நிலத்திற்கு நான் கூறும் வழி சென்றால் சுமார் 3 கி.மீ துரம் இருக்குமா என்றால் சுமார் 1 ½ கி.மீ துரம் ஊரை சுற்றி வரவேண்டும். சர்வே எண்.238/2–ல் மத்தியில் கிழமேலாக பாதை இருந்ததா என்றால் இல்லை. சர்வே எண்.248 ற்கு செல்வதற்கு சர்வே எண். 240 ல் இருந்து சர்வே எண்.238/3, சர்வே எண். 238/4 மற்றும் சர்வே எண். 238/5 க்கும் நடுவில் மேற்குமுகமாக சர்வே எண். 238/2 வழியாக பாதை இருந்தது என்று சொன்னால் பாதையானது சர்வே எண். 238/2 வரை பாதை இருந்தது. அதை தாண்டி எந்த பாதையும் இல்லை. சர்வே எண். 238/2–ல் உள்ள பாதைதான் நான் ஆரம்பகாலகட்டத்தில் பயன்படுத்தினேன். என்னிடம் காட்டப்படும் தும்பிவாடி கிராமம், சர்வே எண். 238–ற்கான புலவரைபடம் தான் என்றால் சரிதான். **(அந்த புலவரைபடத்தின் நகல் பி.த.சா.ஆ. 1 ஆக கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது. ஆவணத்தின் ஏற்புதன்மை தீர்ப்பின்போது கருத்தில் கொள்ளப்படும் என்பதால் புலவரைபடத்தின் நகல் பி.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது. )** சர்வே எண். 238/1, சர்வே எண். 238/2 –ல் உள்ள பூமிகளில் ஆடு, மாடு மேய்ச்சலுக்கு பயன்படுத்தப்படுகிறதா

என்றால் தற்போது விவசாயம்தான் செய்து வருகிறார்கள். சர்வே எண். 248 ற்கும் சர்வே எண். 238/2 ற்கும் இடையில் வேலி அமைக்கப்பட்டுள்ளதா என்றால் கம்பிவேலி அமைக்கப்பட்டுள்ளது. கடந்த 2021ம் வருடம் ஜீன் மாதத்தில் பிரதிவாதிகள் என்னிடம் பூமியை விலைக்கு கேட்டார்கள் என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நாங்கள் சொத்தை விற்பனை செய்வதாக யாரிடமும் கூறவில்லை. 1வது பிரதிவாதி முத்துசாமிக்கு சுமார் 70 வயதாகி, உடல்நலக்குறைப்பாட்டால் உள்ளார் என்றால் சரிதான். 1வது பிரதிவாதிகள் ஒரு மகள் என்றும், அவர் திருமணமாகி வெளி ஊரில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். நானும், மற்ற வாதிகளும் கம்பிவேலி அமைத்த போது பிரதிவாதிகள் தடுத்ததாக சின்னதாராபுரம் காவல் நிலையத்தில் அனைவரும் புகார் கொடுத்தோம். அவ்வாறு புகார் கொடுத்ததற்கு காவல் நிலையத்தில் புகார் மனு ஏற்பு ரசீது ஒன்றை கொடுத்தார்கள். அந்த மனு ஏற்பு ரசீது எண் 189 ஆகும். 4வது வாதி சரவணன் என்பவரின் பூர்வீகம் தும்பிவாடி ஆகும். அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலகட்டத்தில் 4வது வாதி சரவணன் தும்பிவாடியில் president ஆக பதவி வகித்தார். அவர் பஞ்சாயத்து அலுவலகத்தில் குடியிருக்கவில்லை. எனது வழக்குரையில் 4வது வாதி பஞ்சாயத்து அலுவலகத்தில் குடியிருந்து வருவதாக குறிப்பிடடுள்ளேன் என்றால் சரிதான். அசல் வழக்கை தாக்கல் செய்வதற்கு உண்டான விவரங்களை நாங்கள் நால்வரும் கூறினோம். சர்வே எண். 238/1–ல் அரசு வழிகாட்டு மதிப்பு எவ்வளவு என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்திற்குண்டான சொத்து மதிப்பு எவ்வளவு என்று நான் கேட்டு அறியவில்லை. என்னுடைய பிரமாண வாக்குமுலத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை நாங்கள் நால்வரும் சேர்ந்து தான் குறிப்பிட்டுள்ளோம். பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் உள்ள விவரங்களை நான் தெரிந்து கொள்ளவில்லை. நான் கம்பிவேலி போட்டு முடித்த பின்பு, பிரதிவாதிகள் மீது மீண்டும் சின்னதாராபுரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் ஆமாம். கொடுத்தேன். நாங்கள் தாவா சொத்தில் அமைத்துள்ள 15 அடி அகலமுள்ள கம்பிவேலி பாதையில் பிரதிவாதி செல்ல

வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். சர்வே எண். 238/3–ல் உள்ள சண்முகத்திற்கு சொந்தமாக நிலத்திற்கு கிழபுரம் கம்பிவேலி அமைத்துள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு அமைத்தபோது மேற்படி சண்முகம் என்பவர் ஆட்சேபணை எதுவும் செய்யவில்லையா என்றால் இல்லை. சர்வே எண். 238/1 ற்கு மேல்புறமாக சர்வே எண். 247 உள்ளதா என்றால் சரியல்ல. சர்வே எண். 117 தான் அமைந்துள்ளது. நாங்கள் கம்பிவேலி அமைத்த இடத்திற்கும், பிரதிவாதிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், பிரதிவாதிகள் எங்களுக்கு எவ்வித இடையூறும் செய்யவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண். 238/1–ல் தெற்கு கடைசியில் ஒரு பாதை இருந்தது என்றும், அதை நாங்கள் அழித்துவிட்டு, கம்பிவேலி பதித்தோம் என்றால் சரியல்ல. 2 வது முறையாக பிரதிவாதிகளுக்கு எதிராக சின்னதாராபுரம் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவிற்கு புகார் மனு ஏற்பு ரசீது ஏதேனும் வழங்கினார்களா என்றால் முதல் முறையாக கொடுத்த புகார் மனுவிற்கு புகார் ஏற்பு ரசீது வழங்கவில்லை. 2 வதாக கொடுத்த புகார் மனுவிற்கு தான் புகார் ஏற்பு ரசீது எண். 189 வழங்கினார்கள். பிரதிவாதிகளின் வீட்டில் இருந்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண். 248 ற்கு செல்வதற்கு எந்த வழியாக செல்லாம் என்றால் கரூர் தாராபுரம் மெயின்ரோட்டில் உள்ள ஐந்து ரோட்டில் இருந்து தொட்டிவாடி செல்லும் தார்ரோடு வழியாக சர்வே எண். 250 உள்ள பாதை வழியாக வந்தால் பிரதிவாதியின் நிலத்திற்கு சென்றுவிடலாம். மேற்படி பாதை தான் சுமார் 1 ½ கி.மீ துரம் உள்ள பாதையாகும்.

**(கற்றறிந்த பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுங்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.